www.padippakam.com



# நல்லூர் வீழ்ந்தபோது போர்த்துக்கேயருக்கு நிலபப்பாவாடை விரித்து வரவேற்ற தமிழர்கள்

26

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

முன்னேறி வந்த போத்துக்கேயப் படைகளை சங்கிலியன் தமிழர் படை வீராவேசமாக எதிர்த்து நின்றாலும், நாடு பிடிக்கும் யுத்தத்திலும், கடற் கொள்ளைகள் மற்றும் நகரங்களைச் சூறையாடும் சண்டைகளிலும் நீண்ட அனுபவம் பெற்ற அவர்களை, யுத்த தந்திர ரீதியாக பயிற்சி இல்லாத இவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதனால் சங்கிலியனின் அரண்மனை இருந்த உட்புறக் கோட்டையைத் தவிர நகரம். முழுவதும் போத்துக்கேயர் வசமாகியது.

மக்களெல்லாம் பயத்தில் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு நல்லூரை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். அரண்மனைக் கோட்டைக்கு அருகிலிருந்த மைதானத்தில் முகாமிட்ட போர்த்துக்கேயப் படை தங்கள் தளபதி பிறகன்சாவின் உத்தரவின் பேரில் நகர் முழுவதையும் சூறையாடியது. இந்தச் சூறையாடலின்போது சங்கிலியின் மூத்த மகன் அதாவது பட்டத்து இளவரசனின் மனைவியும், மற்றும் அரண்மனைப் பெண்களும் கைது செய்யப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புக்களில் காணப்படுகின்றது. யுத்தம் நடக்கும்போது இவர்கள் எப்படி அரண்மனையை விட்டு வெளியே வந்தார்கள் என்பது தெரியவில்லை.

போர்த்துக்கேயத் தளபதி மறுநாள் காலையில், அரண்மனைக் கோட்டையைத் தகர்க்கத் திட்டமிட்டிருந்தான். ஆனால் சங்கிலி அன்றிரவே தன்னுடைய உடமைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு கோப்பாய்க்குச் சென்றுவிட்டான்.

திட்டமிட்டபடி மறுநாள், கோட்டையை உடைத்துக் கொண்டு அரண்மனைக்குள் பிரவேசித்த போர்த்துக்கேயருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அங்கு எல்லாமே வெறுமையாக இருந்தது.

பொக்கிஷங்கள் இல்லாத அரண்மனையையும், மக்களில்லாத நகரையும் வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று போர்த்துக்கேயத் தளபதி பிறகன்சா யோசித்துக் கொண்டிருந்தபோது சங்கிலியனின் எதிரியான பரநிருபசிங்கன், ‘மக்கள் மீண்டும் நகரத்துக்குள் வந்தால் வெகுமதிகள் வழங்கப்படும்’ என்றும், மக்கள் அச்சமின்றி தமது ஆட்சியின் கீழ் வாழலாம் என்றும் பறை அறிவிக்கும்படி அவனுக்குத் தூதனுப்பினான். அவ்வாறே அவனும் பறை அறிவிக்க பரநிருபசிங்கனும் அவனது பரிவாரங்களும் சிறிதளவு மக்களையும் அழைத்துக் கொண்டு நல்லூர் நகருக்குள்வந்து போர்த்துக்கேயத் தளபதி பிறகன்சாவுக்கும் அவனது பிரதானிகளுக்கும் நிலபாவாடை விரித்து வரவேற்றதாக கர்ணபரம்பரைக் கதைகள் உண்டு.

நகருக்குள் வந்த மக்களின் தொகை போதாமையால் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருந்த தென்இந்தியப் பகுதிகளிலிருந்து மக்களைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுசெய்து, அதற்கு வேண்டிய படகுகளை அனுப்பிய போத்துக்கேயத் தளபதி, தனது படைகளில் ஒரு பிரிவை நல்லூர் நகரில் நிறுத்திவிட்டு, எஞ்சிய படைகளைத் திரட்டிக் கொண்டு சங்கிலியனைப் பிடிப்பதற்காக கோப்பாய்க்குப் படை எடுத்துச் சென்றான்.

தன்னுடைய ஒற்றர்கள் மூலமாக அதை அறிந்துகொண்ட சங்கிலியன் அங்கிருந்து பச்சிலைப்பள்ளிக்கு பின்வாங்கத் தீர்மானித்தான். அதற்குள் சங்கிலியனின் படைக்குள் ஊடுருவியிருந்த பரநிருபசிங்கனின் ஆட்கள், சங்கிலியனுக்கு எதிராகக் குழப்பம் விளைவித்து அவனைப் போத்துக்கேயரிடம் பிடித்துக் கொடுக்க சூழ்ச்சி செய்தனர். ஆனால் சங்கிலியன் தனக்கு விசுவாசமான படைத் தலைவர்களின் துணையோடு அவர்களைப் பிடித்து சிரச்சேதம் செய்து கொன்றுவிட்டு, அவர்களது தலைகளை கோட்டை வாசலில் தொங்கவிட்டுவிட்டுச் சென்றுவிட்டான்.

எப்படியும் சங்கிலியனைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு, கோப்பாய் கோட்டைக்குச் சென்ற போர்த்துக்கேயத் தளபதி பிறகன்சாவுக்கு, அங்கும் பெருத்த ஏமாற்றமே காத்திருந்தது. கோட்டை வாசலில் தொங்கவிடப்பட்டிருந்த 12 தமிழர்களின் தலையைத் தவிர அவனால் வேறெதையும் கைப்பற்ற முடியவில்லை. இதனால் பெருத்த அவமானமும் ஆத்திரமும் அடைந்த அவன் தான் அந்தக் கோட்டையில் தங்கிக்கொண்டு, எப்படியாவது சங்கிலியனைப் பிடித்து வருமாறு 400 படைவீரர்களை அனுப்பிவைத்தான்.

சங்கிலியனோ, போர்த்துக்கேயப் படையினருக்குத் தண்ணி காட்டுவதற்காக சரசாலை, பச்சிலைப்பள்ளி, ஆனையிறவு வழியாக வன்னிக்காடுவரை அவர்களை இழுத்துச் சென்றான்.

இதற்கிடையில் கோப்பாயில் தங்கியிருந்த போர்த்துக்கேயப் படையினர் மத்தியில் சின்னம்மை, பொக்குளிப்பான் முதலான தொற்றுநோய்கள் பரவத் தொடங்க, சங்கிலியனைத் தேடி வன்னிக்குச் சென்ற படைகள் திருப்பியழைக்கப் பட்டன. இதை அறிந்த சங்கிலி போர்த்துக்கேயரைத் தாக்க இதுவே தருணமென்றறிந்து திருகோணமலையில் ஆட்சிசெய்த வன்னியனிடம் படை உதவி பெற்றுக் கொண்டு கோப்பாய்க்கு வந்து அவர்கள் மேல் தாக்குதல் தொடுத்தான். ஆனால், சங்கிலியன் தரப்பிலிருந்த விரசிங்கன் அல்லது வீரலிங்கன் என்றழைக்கப்படும் படைத்தலைவன் ஒருவன் போர்த்துக்கேயரிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டு, தன் கீழ் இருந்த 1500 படை வீரர்களுடன் அவர்கள் பக்கம் சேர்ந்துவிட சங்கிலியனின் முயற்சி தோல்வியடைந்தது.

> ‘மக்கள் மீண்டும் நகரத்துக்குள் வந்தால் வெகுமதிகள் வழங்கப்படும்’ என்றும், மக்கள் அச்சமின்றி தமது ஆட்சியின் கீழ் வாழலாம் என்றும் பறை அறிவிக்கும்படி தாதனுப்பினான்.

இந்தச் சமயத்தில் சங்கிலியனின் ஆலோசகனாக இருந்த நாகண்ணன் என்னும் பிராமணன், போர்த்துக்கேயரிடம் சமாதானமாகப் போகும்படி அவனுக்கு ஆலோசனை சொல்ல, அதை ஏற்றுக்கொண்ட சங்கிலியன் வாகுஆராட்சி, விஜயபாகு முதலியார் ஆகிய இருவரையும் போர்த்துக்கேயத் தளபதி பிறகன்சாவிடம் தூது அனுப்பினான்.

பிறகன்சாவுக்கும், தென்னிந்தியாவிலிருந்தும் அவன் எதிர்பார்த்தபடி, அங்குள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் வந்து குடியேற மறுத்துவிட்டதாலும், தாங்கள் யாழ்ப்பாணத்திற்கு முடிசூட என வளர்த்துவந்த வன்னிய இளவரசனான அல்போன்சோவும், சங்கிலியனின் எதிரியான பரநிருபசிங்கனும், பெரியளவுக்கு மக்கள் ஆதரவைப் பெறாதவர்களாக இருந்தபடியால் தங்களுக்குத் தொடர்ந்து தொல்லை தந்துகொண்டிருக்கும் சங்கிலியுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து அவனைத் தமக்குக் கீழ்ப்படுத்தி, ஆட்சிசெய்ய வைத்து திறை பெறுவதே மேலானது என நினைத்து, தானும் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ளத் தயாரென்று சங்கியனின் தூதுவர்களிடம் சொல்லியனுப்பினான்.

அதன் பின், இரு தரப்பாருக்கும் இடையில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இவ் உடன்படிக்கை அநேகமாக 1562-ல் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. தமிழிலும், போர்த்துக்கேய மொழியிலும் எழுதப்பட்ட இவ் உடன்படிக்கையின் படி,

1. போர்த்துக்கேய அரசு செக்ராசசேகரன் என்கிற சங்கிலி யாழ்ப்பாண அரசனாக இருக்க உடன் படுவதாகவும், அவன் ஆண்டுதோறும் 12 கொம்பன் யானைகளும் 1200 பதக்கு* பணமும் கட்ட வேண்டும் எனவும்,
2. சங்கிலி கிறிஸ்தவ மதத்தில் சேர விரும்புவோர் எவ்ரையும் தடை செய்யாதிருக்க வேண்டும் எனவும்,
3. சங்கிலியிடம் இருக்கும் கோட்டை அரசனான வீதிராயனின் செல்வம் அனைத்தையும் போர்த்துக்கேயருக்கே கொடுக்க வேண்டும் எனவும்,
4. பிறகன்சா கோவாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு படையெடுத்து வந்த செலவை சங்கிலியனே கொடுக்க வேண்டும் எனவும்,
5. மன்னார் தீவை போர்த்துக்கேயருக்கே கொடுக்க வேண்டும் எனவும்,

ஒத்துக்கொள்ளப் பட்டதோடு இவ் உடன்படிக்கைக்கு பிணையாக சங்கிலியனது மூத்த மகனாகிய பட்டத்து இளவரசனையும் இரு முதலிமாரையும் பிறகன்சாவிடம் சங்கிலி ஒப்படைத்தான். அவன் அவர்களை தனது கப்பல் தளத்துக்கு அனுப்பி அங்கே பணயமாக வைத்திருந்தான்.

சங்கிலி முன்னரைப் போல் நல்லூரிலுள்ள தனது பழைய இராஜதானியிலிருந்து அரசாள, பிறகன்சா தன்னுடைய படையின் ஒரு பகுதியை நல்லூரிலும், மறு பகுதியை கோப்பாயிலும் நிறுத்திவிட்டு வேட்டையாடுவதற்கென ஆனையிறவுக்குச் சென்றான்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தளபதி இல்லாமல் இருக்கும் போர்த்துக்கேயப் படையை தாக்கத் தீர்மானித்த சங்கிலி ஒரே நேரத்தில், கோப்பாயிலும், நல்லூரிலும் இருந்த படைகள் மீது தாக்குதல் நடாத்தினான். சங்கிலியனின் படைகள் மிகுந்த ஆவேசத்தோடு போத்துக்கேயப் படைகளை, கண்ட இடங்களில் எல்லாம் வெட்டி வீழ்த்தினர். அவர்களது ஆவேசத் தாக்குதலுக்கு எதிர்கொள்ள முடியாமல் நிலை தடுமாறிப்போன போர்த்துக்கேயப் படைகளும், கிறிஸ்தவ மதகுருமார்களும், கிடைத்த வள்ளங்களிலும், படகுகளிலும் ஏறித் தப்பிஓடி கடலில் தரித்து நின்ற போர்த்துக்கேய கப்பல்களில் தஞ்சமடைந்து கொண்டனர். இந்தச் செய்தியை அறிந்த போர்த்துக்கேயத் தளபதி பிறகன்சாவும், ஆனையிறவிலிருந்து படகேறி தனது கப்பலுக்கு வந்து சேர்ந்தான்.

அதற்கு முன் போர்த்துகேயக் கப்பலில் பணயம் வைக்கப்பட்டிருந்த தனது மகனையும் முதலிமாரையும் மீட்பதற்கு சங்கிலி ஒரு படை ஒன்றை அனுப்பிவைத்தான். அது தோல்வியைத் தழுவிக் கொள்ள, மீண்டும் பிறகன்சாவுடன் சமாதானம் பேசி தனது மகனை மீட்க அவன் விரும்பினான். ஆனால் அதற்கு பிறகன்சா ஒத்துக்கொள்ளவில்லை.

போத்துக்கேயர் இப்போரிலே தோல்வியுற்றுவிட்டாலும், கோட்டை அரசன் வீதிராயனின் பொருளென சங்கிலி ஒப்படைத்த 80,000 குறுசாடு கருடனும், நல்லூர் நகரத்தை கொள்ளையடித்தபோது அகப்பட்ட பொருட்களுடனும் பட்டத்து இளவரசன் மற்றும் அவன் மனைவி, இரண்டு முதலிகள், நல்லூரைக் கைப்பற்றியபோது சிறைப்பிடிக்கப்பட்ட வீதிராயனின் குடும்பம், அவர்கள் வசமிருந்த புத்த தாது என்பனவற்றுடனும், சங்கிலியனின் ‘அரியாசனத்தின் மேலிருந்த முத்துப் பந்தலையும் எடுத்துக்கொண்டு கோவாவுக்குத் திரும்பினார்கள்.

சங்கிலியனின் மகனும் அவனது மனைவியும் கோவா நகரில் கிறிஸ்தவ மதத்தவர்களாக கட்டாயமாக மதம் மாற்றப்பட்டனர். கி.பி. 1571-ம் ஆண்டு கோவா நகரத்திலேயே சங்கிலியின் மகன் இறந்துவிட்டான். அவனது மனைவி அதற்கு முன்பே இனந்தெரியாதவர்களால் நஞ்சூட்டிக் கொல்லப் பட்டுவிட்டாள். வீதிராயன் குடும்பத்தினர் அவர்களது சொந்த இடமான கோட்டைக்கே திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர்.

**போர்த்துக்கேயர் காலத்து நாணயம்**

| | | |
|---|---|---|
| 1 பர்தாங்கு | = | 2 செறாபிம் |
| | = | 5 சக்கரம் |
| | = | 6 லாறிம் |
| | = | 10 பொற்பணம் |
| | = | 30 வின்றெம் |
| | = | 100 மா |
| | = | 150 பெரிய காசு |
| | = | 540 றீஸ் |
| 1 பதக்கு | = | 5 லாறிம் |

* பதக்கு (ஸ்பானிய நாணயம்) செறாபிம், லாறிம், வின்தெம் றீஸ் என்பன போர்த்துக்கேய நாணயம்.

**- நக்கீரன்**

படிப்பகம்